ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ   அதி விசேஷமானது

අංක 2291/06 - 2022 අගෝස්තු මස 01 වැනි සඳුදා - 2022.08.01
*2291/06 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 01 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல. DSM/PL/Land/අකු/ක්‍රීඩා/පි/අත්.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :

மத்திய மாகாணம், மாத்தளை மாவட்டத்தில், பல்லேபொல பிரதேச செயலாளர் பிரிவில், உடுகொட உடசிய பத்துவ சிறு பிரிவில் அகுரம்பொட கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட க. கி. வ. 32 இல் குறைநிரப்பி 24, பத்திர இல. 20 இல் துண்டு இல. 521 எனக்காட்டப்பட்டுள்ள சுமார் 0.0203 ஹெக்டயார் (08 பர்ச்சஸ்) விஸ்தீரணம் கொண்ட "திவுல்கஹமுல்ல பில்லேவ" எனும் காணித் துண்டின் எல்லைகள் :-

**இங்கு பகிரங்க தேவை எனப்படுவது** : மமா/க/ப/அகுரம்பொட கனிஷ்ட வித்தியாலய விளையாட்டு மைதானத்திற்கான காணி சுவீகரித்தலாகும்.

வடக்கு : துண்டு இல. 336, 250 ; கிழக்கு : துண்டு இல.250 ; தெற்கு : துண்டு இல. 250, 251 B ; மேற்கு : துண்டு இல. 250, 251B, 250, 336.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2022.08.31 ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு பல்லேபொல பிரதேச செயலாளர் அலுவலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றுய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நஷ்ட ஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2022.08.24 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

எச். எம். சீ. ஏக்கநாயக்க,
பிரதேச செயலாளர்
பல்லேபொல.

பிரதேச செயலகம்,
பல்லேபொல.
2022, யூலை 22.

EOG 08 - 0003



இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.

இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.